நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## புதிய ரக பப்பாளி சாகுபடியில் ரூ. 7.25 லட்சம் லாபம்

First Published : 06 Jan 2011 12:00:00 AM IST



விழுப்புரம்: பாரம்பரிய பப்பாளியைவிட புதிய ரக பப்பாளியை பயிரிட்டால் ஹெக்டேருக்கு குறைந்தபட்சம் ரூ. 7.25 லட்சம் நிகர லாபம் பெறும் வாய்ப்பு உள்ளது.

பழப் பயிர்களிலேயே அதிக உற்பத்தியை ஹெக்டேருக்கு 200 மெட்ரிக் டன் வரை கொடுக்கக்கூடிய ஒரு முக்கிய பயிர் பப்பாளி.

தமிழகத்தில் இந்த பயிர் 444 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஹெக்டேருக்கு 182 மெ.டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

பிப்ரவரி முதல் மார்ச் வரையிலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையிலும் பப்பாளி நாற்று விடவும், நடவு செய்யவும் உகந்த மாதங்களாகும். மழைக்காலங்களில் பப்பாளி நடவு செய்வதை தவிர்க்கவும். ஒரு ஹெக்டேருக்கு நடவு செய்ய சாதா ரகங்களுக்கு 500 கிராம் விதைகள் தேவைப்படும். ரெட்லேடி ரகத்துக்கு 20 கிராம் விதைகள் போதுமானது.

கோ 1 முதல் கோ 7 வரையிலும், ரெட்லேடி போன்ற ரகங்கள் தமிழகத்தில் சாகுபடியில் உள்ளது. இதில் கோ 3, கோ 7, ரெட்லேடி போன்ற ரகங்கள் ஆண் மற்றும் பெண் பூக்கள் ஒரே மரத்தில்

அமைந்த பழமாக, உண்ண ஏற்ற ரகங்களாகும். கோ 2, கோ 5, கோ 6 ரகங்கள் பப்பெய்ன் உற்பத்திக்கும் மற்றும் பழமாக உண்ணவும் ஏற்ற ரகங்களாகும்.

விதை நேர்த்தி: பப்பாளி விதைகள் பொதுவாக குறைந்த முளைப்புத்திறன் கொண்ட பயிராதலால், பப்பாளி விதைகளை விதைப்புக்கு முன்பாக விதை நேர்த்தி செய்தல் அவசியம். எனவே 100 பி.பி.எம். ஜிப்ராலிக் அமிலம் 3 கரைசலில் 16 மணி நேரம் ஊறவைத்தோ அல்லது 2 சதவீத அரப்பு இலைச்சாற்றில் ஊறவைத்தோ அல்லது 1 சதவீத அரப்புத்தூள் கொண்டு விதைகளுக்கு பூச்சுக் கொடுத்தோ விதைப்பு செய்தால் முளைப்புத்திறன் அதிகரிக்கிறது.

தென்னை நார்க்கழிவை அரையடி உயரமுள்ள பேப்பர் கப்புகளில் நிரப்பியோ அல்லது பாலித்தீன் கப்புகளில் நிரப்பியோ அவைகளில் 1 செ.மீ. ஆழத்தில் விதை நேர்த்தி செய்த பப்பாளி விதைகளை ஊன்றி விதைப்பு செய்ய வேண்டும்.

விதைப்பு செய்த பின்பு விதைகளுக்கு பகுதி நிழல் வழங்கப்பட வேண்டும். விதைப்பு செய்த விதைகளுக்கு பூவாளி மூலம் நீர்ப் பாய்ச்ச வேண்டும். தரமான அரையடி உயர பப்பாளி நாற்றுக்கள் 60 நாள்களில் நடவுக்கு தயாராகிவிடும்.

இவற்றை 45 செ.மீ. நீள, அகல, ஆழம் உள்ளவாறு குழிகளை வெட்டி 2 மீட்டருக்கு 2 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

தொடர்ந்து தோட்டக்கலைத் துறையின் ஆலோசனையின் பேரில் உரமிடுதல், நுண்ணூட்டமிடுதல், பயிர் பாதுகாப்பு செய்தல் போன்ற நடைமுறைகளை பின்பற்றினால் கூடுதல் மகசூல் பெறலாம்.

இது குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் க. வீராசாமி கூறியது: "விவசாயிகளுக்கு பப்பாளி பயிர் மிகச் சிறந்த பயிராகும். அப்போதைக்கப்போது மார்க்கெட் நிலவரப்படி கூடுதல் லாபம் பெறலாம். பப்பாளி பயிரில் இரண்டு ஆண்டுகளில் சராசரியாக ஹெக்டேருக்கு 200 முதல் 250 மெ.டன் வரை மகசூல் பெறலாம். ஆண்டின் மிகக் குறைந்தபட்ச சந்தை விலை கிலோ ரூ. 4-க்கு விற்பனை செய்தாலும், ஹெக்டேருக்கு ரூ. 8 லட்சம் மொத்த வருமானமாகவும், செலவு போக ரூ. 7.25 லட்சம் நிகர லாபமாகவும் பெறுவதற்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது' என்றார்.

**நன்மை தரும் பூச்சிகளை பாதுகாக்கலாமே...**

First Published : 06 Jan 2011 12:00:00 AM IST



மகரந்த சேர்க்கை மூலம் நன்மை தரும் பூச்சிகள்

சிதம்பரம்: தமிழகத்தில் விவசாயிகள் அதிகளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதால் நன்மை தரும் பூச்சிகள் அழிந்து வருகின்றன. இதன் விளைவாக மகரந்த சேர்க்கை குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயம் பெரும் சிக்கலை சந்திக்கிறது என சமீபத்தில் வெளியான ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இந்நிலையில் நன்மை தரும் பூச்சிகளை பாதுகாக்கும் விவசாய முறை குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

பெரும்பாலும் தாவரங்கள் இனப்பெருக்கம் செய்வது பூக்களில் மகரந்த சேர்க்கை வழியில்தான். இந்த மகரந்தசேர்க்கையில் ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவுக்கு மகரந்தம் செல்வதே அயல் மகரந்தசேர்க்கை எனப்படும்.

அரிசி, கோதுமை போன்ற புல்வகை தாவரங்களுக்கு பூக்கள் மிக சிறியதாய், கண்களுக்கு புலப்படாத அளவில் இருக்கும். மென்காற்று வீசும்போது பூக்களின் மகரந்தம் அடித்து செல்லப்பட்டு அடுத்த தாவரத்தில் படியும்.

இவ்வாறு இந்த வகை தாவரங்களில் மகரந்த சேர்க்கை இயல்பில் நடைபெற காற்று பெரிதும் துணை செய்கிறது. ஆனால் பல்வேறு காய், கனிகள் சாகுபடியில் குறிப்பாக பூசணி, பரங்கி, வெள்ளரிக்காய் உள்ளிட்ட காய்கனிகள் விளைச்சல் தரும் பூச்சிகளின் வாயிலான மகரந்த சேர்க்கை மிகவும் அவசியம்.

தேனீ, வண்டு, பட்டாம்பூச்சி போன்றவை விவசாயிகளுக்கு நன்மை தரும் பூச்சிகள். இவை, பூக்களில் தேன் எடுக்க ஒவ்வொரு பூவாக செல்லும்போது மகரந்தத்தை எடுத்துச் சென்று அயல் மகரந்தசேர்க்கைக்கு பெரிதும் உதவுகிறது.

சூழலியல் விவசாய முறை: சூழலியல் விவசாய முறை என்பது பண்டைய விவசாய முறைக்கு செல்வது அல்ல. மாறாக இயற்கையில் தாவர வளர்ச்சி குறித்து அறிந்து, சூழலியல் பார்வையில் நவீன அறிவியல் பயன்பாடே சூழலியல் விவசாயமாகும்.

இந்த புதிய விவசாய முறையில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் எந்த நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு மருந்தை தெளிக்க வேண்டும். பொதுவாக அதிகாலையில் பூச்சிமருந்தை அடித்தால் நன்மை தரும் பூச்சிகளை தீங்கிலிருந்து பாதுகாக்கலாம். அதிகாலையில் நன்மை தரும் பூச்சிகள் மற்றும் தேனீக்கள் இயங்காது.

அடுத்ததாக சில தாவரங்களின் பூக்கள் நண்பகலில் இதழ்மூடிக் கொள்ளும் தன்மை கொண்டவை. இந்த தாவரம் பயிரிடப்பட்டுள்ள நிலத்தில் மகரந்த சேர்க்கை செய்யும் பூச்சிகள் நண்பகலில் இதழ் மூடிய பூவை அண்டாது.

எனவே அத்தகைய நண்பகலில் பூச்சி மருந்தை அடிப்பது நன்மை தரும். இவ்வாறு பூச்சிகள் இயக்கம், தாவர இயல்பு முதலியவற்றை அறிந்து பூச்சி மருந்தை தெளித்து பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் சூழலியல் விவசாய முறையாகும்.

பிறபயன்கள்: உலகில் 90 சதவீத உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் நூறு தாவரங்களில் எழுபத்தொன்று தாவரங்கள் பூச்சியினால் மகரந்த சேர்க்கை ஏற்படும் தாவரங்கள் ஆகும்.

இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த அயல் மகரந்தசேர்க்கைக்கு சூழலியல் விவசாய முறை பெரிதும் உதவுகிறது. மகரந்த சேர்க்கை செய்யும் பூச்சியினங்கள் அழிந்தால் விவசாயம் பெருமளவு பாதிக்கப்படும். இத்தகைய சூழலில் சர்வதேச அளவிலான வேளாண் அரங்குகளில் இந்த சூழலியல் விவசாய முறை அதிகளவில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

தன் மகரந்தை சேர்க்கை ஏற்படும் கத்தரிகாய் போன்ற தாவரத்திலும், அயல் மகரந்த சேர்க்கை நடைபெற்றால் அதிகளவு மகசூல் கிடைக்கும். எனவே சூழலியல் விவசாய முறைகள் மூலம் தன் மகரந்த சேர்க்கை பயிர்களின் மகசூலை பெருக்கவும் உதவுகிறது. இவ்வாறு தாவர இயல்புகளை அறிந்து பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நன்மை தரும் பூச்சிகளை பாதுகாக்கும் சூழலியல் விவசாய முறைகள் தமிழக விவசாயிகள் பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் மற்றும் லாபம் பெறலாம் என்றார் ராஜ்பிரவீன்.

**இயற்கை முறையில் தக்காளி சாகுபடி: ஹெக்டேருக்கு 25 டன் வரை மகசூல்**

First Published : 06 Jan 2011 12:00:00 AM IST



திருவள்ளூர்: செயற்கை உரங்களை பயன்படுத்தி தக்காளி சாகுபடி செய்வதைக் காட்டிலும், இயற்கை வழி வேளாண் முறையில் தக்காளி சாகுபடி செய்வதன் மூலம் அதிக மகசூல் பெற்று லாபம் பெறலாம் என திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: தக்காளி சாகுபடி பொதுவாக கோடைப் பருவத்திலும் இல்லாமல், மழைக்காலத்திலும் இல்லாமல் இதுபோல் இடைபட்ட காலத்தில் செய்வது அதிக லாபம் தரும். மேலும் பூச்சிகளின் தாக்குதல், நோய் பாதிப்பில் இருந்து இப்பருவத்தில் எளிதாக காக்க முடியும்.

நாற்றங்கால் முறை: மண்ணைத் தோண்டி அடித்தாள்களை அகற்ற வேண்டும். 10 நாள்கள் சிதைவு ஏற்பட நிலத்தை விட்டு விட வேண்டும். வடிகால் நன்றாக அமைவதற்கு உயரமான பாத்திகள் அமைக்கவும். தொழு உரம் அல்லது கம்போஸ்ட், செம்மண், மணல் ஆகியவற்றை சம

அளவில் நன்றாக கலந்து நிலத்தில் இட வேண்டும். தொழு உரத்துடன் அசோஸ் பைரில்லத்தை 1 சதுர மீட்டருக்கு 20 கிராம் என்ற அளவில் இட வேண்டும். பாஸ்போ பாக்டீரியாவையும் 1 சதுர மீட்டருக்கு 20 கிராம் என்ற அளவில் இட வேண்டும். நாற்று அழுகல் நோயைக் கட்டுப்படுத்த கோதுமைத் தவிடு, மக்கிய மண் ஆகியவற்றை சம அளவில் கலந்து இட வேண்டும்.

விதை அளவு: நாட்டு ரக விதைகள் ஒரு ஹெக்டேருக்கு 400 கிராமும், வீரிய ஓட்டு ரக விதையாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 150 கிராமும் இட வேண்டும்.

விதை நேர்த்தி: விதை உற்பத்தி நிறுவனங்களால் ரசாயனப் பொருள்களை கொண்டு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை தவிர்க்க வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன், 1 கிலோ விதையை ட்ரைக்கோடெர்மா விரிடியுடன் கலந்து நேர்த்தி செய்யலாம். விதைப்பதற்கு முன் 400 கிராம் விதையுடன் 40 கிராம் அசோஸ் பைரில்லத்தை கலக்க வேண்டும். வீரிய ஒட்டு ரக விதைகளுக்கு 20 கிராமுக்கு 150 கிராம் என்ற அளவில் கலக்க வேண்டும். நாற்றங்கால் பாத்தியில் 10 செ.மீட்டர் இடைவெளி விட்டு வரிசையாக விதைக்க வேண்டும்.

நடவு வயல்: சரியான ஈரப்பதத்தில் வயலை 3 அல்லது 4 முறை உழவு செய்யவேண்டும். 10 நாள் சிதைவு ஏற்படுவதற்காக விட வேண்டும். பசுந்தாழ் உரமாக சணப்பை விதைத்து 35 நாட்களுக்குப் பின் மடக்கி உழ வேண்டும். கடைசி உழவுக்கு முன் ஹெக்டேருக்கு 25 டன் வீதம் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடலாம். நடவுக்கு முன் 20 கிலோ தொழு உரத்துடன் அசோஸ் பைரில்லம் 2 கிலோ (1 ஹெக்டேருக்கு) பாஸ்போ பாக்டீரியா 2 கிலோ ஆகியவற்றை கலந்து இட வேண்டும். 60 செ.மீட்டர் இடைவெளியில் பார்கள், உழவு சால்கள் அமைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12 எண்ணிக்கை என்ற அளவில் இனக் கவர்ச்சி பெரோமோன்களை அமைக்க வேண்டும். பேசில்லஸ், துரின்ஷியன்சிஸ் 2 கிலோ என்ற அளவில் தெளிக்கவும். தாக்கப்பட்ட பழங்களை அப்புறப்படுத்தி அழிக்கவேண்டும். வேப்பெண்ணெய் 3 சதவீதம், வேப்ப விதை பருப்புச் சாறு 5 சதவீதம் என்ற அளவில் தெளித்து பூச்சி பரவுதலைத் தடுக்க வேண்டும்.

புள்ளியிட்ட அழுகல் வைரஸ்: 10 சதவீத சோள இலைச்சாறு, அல்லது ப்ரோசோபிஸ் அல்லது தேங்காய்ச் சாறு 15 நாள் இடைவெளியில் தெளிப்பதன் மூலம் வைரஸ் தாக்குதலில் இருந்து பாதுகாக்க முடியும்.

அறுவடை: முக்கால் பருவ முதிர்ச்சியில் பழங்களை அறுவடை செய்யவும். அதிக அளவு பழுக்க விடக்கூடாது. இலை மற்றும் செடியின் அனைத்து பாகங்களையும் எடுத்து அவற்றை கம்போஸ்ட் செய்யவேண்டும். பொதுவாக 1 ஹெக்டேருக்கு 15 டன் வரை மகசூல் பெற முடியும். மேற்கண்ட இயற்கை வேளாண் முறைகளின்படி தக்காளி சாகுபடி செய்தால் ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன்கள் வரை நிச்சயம் மகசூல் செய்ய முடியும்.

இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு உதவிப் பேராசிரியர்கள் மணிமேகலை மற்றும் முரளிதரன் ஆகியோரை 9444339404, 9894540420 என்ற மொபைல் எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்றார் கோ.வி.ராமசுப்பிரமணியம்.

**உளுந்து சாகுபடிக்கு உதவுமா அரசு?**

த. தேவராஜ்

First Published : 06 Jan 2011 12:00:00 AM IST



கடலூர், ஜன. 5: தமிழகத்தில் காவிரி டெல்டா பாசன மாவட்டங்களில் சம்பா நெல் அறுவடைக்குப் பின், வயல்களில் நஞ்சை தரிசில் உளுந்து பயிரிடப்படுகிறது.

அறுவடைக்கு 10 தினங்களுக்கு முன், வயல்களில் உளுந்து விதைக்கப்படும். அறுவடை முடிந்து, வயலில் இருக்கும் ஈரப்பதம், மற்றும் பனிப்பொழிவு மூலம் 3 மாதத்தில், உளுந்து அறுவடைக்கு வந்துவிடும். செலவு அதிகம் இன்றி, ஏக்கருக்கு குறைந்தபட்சம், |6 ஆயிரம் மதிப்புள்ள உளுந்து கிடைக்கும்.

கடலூர் மாவட்டத்தில் சுமார் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள். இங்கு கடைமடைப் பகுதிகள் அதிகம் இருப்பதால், காலம் கடந்து தண்ணீர் கிடைக்கும் ஆண்டுகளில், வடகிழக்குப் பருவமழையின் தாக்கத்தால் சம்பா பயிரின் நிச்சயமற்ற நிலை, உளுந்து சாகுபடியைப் பாதிக்கிறது.

இவ்வாண்டு கடலூர் டெல்டா பகுதிகளில் 1.45 லட்சம் ஏக்கரில் சம்பா நடவு செய்யப்பட்டது. காவிரி நீர் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. 50 ஆயிரம் ஏக்கரில் காலம் கடந்து நடவு முடிவடைந்தது. ஆனால் மழை வெள்ளத்தால் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிர் முற்றிலும் சேதமடைந்து விட்டது.

காலம் கடந்து நடவு செய்த வயல்களில், அறுவடை பிப்ரவரி மாதத்துக்குத் தள்ளிப் போகும் என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். ஜனவரி 15 வாக்கில் விதைத்தால்தான் நஞ்சை தரிசில் உளுந்து சாகுபடி செய்ய முடியும் என்பது விவசாயிகளின் கருத்து.

எனவே கடலூர் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரில் இந்த ஆண்டு உளுந்து சாகுபடி இல்லை என்பது உறுதியாகி விட்டது. 70 ஆயிரம் ஏக்கரில் உளுந்து பயிரிட வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். இதற்கு சுமார் 1,400 டன் விதை உளுந்து தேவைப்படும். விதை உளுந்து கிடைப்பதில்தான் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. உளுந்து விதை தேவையில் 10 சதவீதத்தை வேளாண் துறையும், 40 சதவீதத்தை தனியார் விதை நிறுவனங்களும், 50 சதவீதத்தை விவசாயிகளும் தங்கள் விதை சேமிப்பில் இருந்தும் பயன்படுத்த வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளாக கடலூர் மாவட்டத்தில் உளுந்து சாகுபடி முறையாக நடைபெறாததால், விவசாயிகளிடம் விதை உளுந்து கையிருப்பு இல்லை. வேளாண் துறையிலும் தற்போது இருப்பு இல்லை. வம்பன் என்ற ரக உளுந்து வைத்து இருக்கிறார்கள். அது கடலூர் டெல்டா பகுதிகளுக்கு உகந்ததல்ல என்கிறார்கள் விவசாயிகள். தனியாரிடம் விதை உளுந்து விலை கிலோ | 100 முதல் | 120 வரை உள்ளது. (சாதாரண உளுந்து விலை கடைகளில் கிலோ | 65 முதல் | 70 வரைதான்.)

உளுந்து உற்பத்தியைப் பெருக்க கடந்த ஆண்டு, மத்திய அரசு உணவுப் பாதுகாப்பு திட்டத்தில் தமிழகத்துக்கு | 10 கோடி ஒதுக்கியது. அதில் கடலூர் மாவட்டத்துக்கு | 1.47 கோடி வழங்கப் பட்டது. ஆனால் இதைக் கொண்டு உளுந்து விதை உற்பத்தியைப் பெருக்க, மாநில அரசு எடுத்த நடவடிக்கை திருப்தியாக இல்லை.

கடலூர் மாவட்டத்தில் சுமார் 70 ஆயிரம் ஏக்கருக்கு விதை உளுந்து தேவைப்படும் நிலையில், வேளாண் விரிவாக்க மையங்களில் விதை உளுந்து கையிருப்பு இல்லை என்கிறார் கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன்.

அவர் மேலும் கூறுகையில்,10 தினங்களுக்குள் உளுந்து விதை கிடைத்தால் மட்டுமே, விவசாயிகள் உளுந்து பயிரிட முடியும். கடலூர் மாவட்டத்துக்குத் தேவையான ஏடிடி 3 உளுந்து விதையை, தேசிய விதைக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்து வழங்க வேண்டும்.

மற்ற டெல்டா மாவட்டங்களில் ஆழ்குழாய் கிணறுகள் இருப்பதால், சம்பா அறுவடை தாமதமானாலும் உளுந்து விவசாயம் நடக்கிறது. கடலூர் மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அதிகம் இல்லாததால், நஞ்சை தரிசில் உளுந்து சாகுபடி நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. வீராணம் நீரை பயன்படுத்தி உளுந்து நேரடி சாகுபடி திட்டத்தை செயல்படுத்த, கடந்த ஆண்டே விவசாயிகள் வலியுறுத்தினர். அதுபற்றியும் வேளாண் துறை போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றார் ரவீந்திரன்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், இவ்வாண்டு கடலூர் மாவட்டத்தில் 60 ஆயிரம் முதல் 70 ஆயிரம் ஏக்கர் வரை, உளுந்து விதைக்க வாய்ப்பு உள்ளது. அரசின் பங்காக, ஏ.டி.டி. 3 ரகம் உளுந்து விதை 60 டன் வழங்கி விட்டோம். மேற்கொண்டு தேவைக்கு

வேளாண்துறை கொள்முதல் செய்தால்தான் முடியும். விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை வந்தால் கொள்முதல் செய்ய முடியும். ஆனால் அது வருவதற்குள் உளுந்து விதைப்புக்கான காலம் கடந்து விடும் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 86.17 அடி**

First Published : 05 Jan 2011 11:08:25 AM IST

ஈரோடு, ஜன.4: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 86.17 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 1,030 கன அடி தண்ணீர் வந்தது.
அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்ககப்பட்டுள்ளது.
அணையின் நீர் இருப்பு 19.18 டிஎம்சி.

**முட்டை விலை ரூ. 2.91: வரலாறு காணாத உயர்வு**

First Published : 06 Jan 2011 12:26:19 AM IST

நாமக்கல், ஜன,5: முட்டை ஒன்றின் விலை ரூ. 2.91 ஆக நிர்ணயிக்கப்பட்டது. புதன்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இந்த விலை இதுவரை கண்டிராத ஒன்று. இதற்கு முன் கடந்த நவம்பர் தொடக்கத்தில் முட்டையின் விலை ரூ. 2.90-ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை இதுவே அதிகபட்ச விலையாக இருந்தது.

வடமாநிலங்களில் கடும்குளிர் மற்றும் விழாக் காலங்களையொட்டி தேவைப்பாடு அதிகரித்ததே விலை உயர்வுக்கு முக்கிய காரணம் என்று கோழிப்பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

÷கடந்த நவம்பர் இறுதியில் முட்டையின் விலை வீழ்ச்சி அடைந்ததால், குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

**மழை பாதிப்பு: அறிக்கை அளித்தது மத்தியக் குழு**

First Published : 06 Jan 2011 12:00:00 AM IST

சென்னை, ஜன. 5: தமிழகத்தில் மழை பாதிப்புகளை பார்வையிட்ட மத்திய குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் அளித்துள்ளது.

இதனிடையே, மாநிலம் முழுவதும் மழையால் சேதம் அடைந்த நெற்பயிர்களின் அளவு 2.91 லட்சம் ஹெக்டேர் என அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை கடந்த நவம்பர் 1-ம் தேதி முதல் தீவிரமாக இருந்தது. தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால், நெற்பயிர்கள் கடுமையாக சேதம் அடைந்தன. குறிப்பாக டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பயிர்ச் சேதம் அதிகளவு இருந்தது.

மாவட்ட அளவில் ஆய்வு: மாநிலத்தில் பயிர்ச் சேதத்தை ஆய்வு செய்ய வருவாய், வேளாண்மை ஆகிய துறைகளைக் கொண்ட அலுவலர்கள் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டனர். அந்தக் குழுவினர் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்துக்கும் சென்று ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர். தாங்கள் சேகரித்த சேத விவரங்களை மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர். அந்த விவரங்கள் அனைத்தும் சென்னையில் உள்ள வருவாய்த் துறையிடம் கொடுக்கப்பட்டன.

திருவாரூரில் அதிகம்: மொத்தமுள்ள 32 மாவட்டங்களில் 30 மாவட்டங்கள் வரை மழை பாதிப்பின் சேத விவரங்கள் தொகுக்கப்பட்டன. அதில், திருவாரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 87 ஆயிரத்து 317 ஹெக்டேரும், நாகப்பட்டினத்தில் 76 ஆயிரத்து 391 ஹெக்டேர் பயிர்களும் சேதம் அடைந்துள்ளன.

புதுக்கோட்டையில் 21 ஆயிரத்து 146 ஹெக்டேரும், ராமநாதபுரத்தில் 20 ஆயிரத்து 598 ஹெக்டேர் நெற்பயிர்களும் நாசம் அடைந்துள்ளதாக வருவாய்த் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடலூரில் 19 ஆயிரத்து 423 ஹெக்டேர் பயிர்களும் சேதம் அடைந்துள்ளன.

சேதம் அடைந்த நெற்பயிர்களுக்கு ஹெக்டேருக்கு | 10 ஆயிரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகங்கள் மூலம் நிவாரண நிதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று, நெல்லைத் தவிர பிற பாசனப் பயிர்கள் 26 ஆயிரத்து 464 ஹெக்டேர் அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு | 7 ஆயிரத்து 500 அளிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 82 ஆயிரத்து 235 மானாவாரிப் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. அரியலூரில் 22 ஆயிரத்து 876 ஹெக்டேரும், பெரம்பலூரில் 56 ஆயிரத்து 967 ஹெக்டேர் மானவாரிப் பயிர்களும் நாசம் அடைந்துள்ளன. திருச்சியில் 12 ஆயிரத்து 356 ஹெக்டேரும், ராமநாதபுரத்தில் 11 ஆயிரத்து 35 ஹெக்டேர் அளவுக்கு மானாவாரிப் பயிர்கள் சேதம் கண்டுள்ளன. இந்தப் பயிர்களின் சேதத்துக்கு ஹெக்டேருக்கு | 4 ஆயிரம் அளிக்கப்படுகின்றன.

மத்திய குழு அறிக்கை தாக்கல்: இதனிடையே, தமிழகத்தில் மழை வெள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட்ட மத்திய உள்துறை இணைச் செயலாளர் எல்.விஸ்வநாதன் தலைமையிலான குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் செவ்வாய்க்கிழமை அளித்துள்ளது.

மத்திய குழுவின் அறிக்கையை, மத்திய உள்துறை செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழு ஆராயும். இந்தக் குழுவில் உள்துறை, நிதி, வேளாண்மை உள்ளிட்ட துறைகளின் அதிகாரிகள்

இருப்பார்கள். குழுவின் சார்பில் ஒரு அறிக்கை தயாரிக்கப்படும். இந்த அறிக்கையை மத்திய அமைச்சர்கள் கொண்ட குழு ஆராய்ந்து தமிழகத்துக்குத் தேவையான நிவாரண நிதியை ஒதுக்கீடு செய்யும்.

மத்திய உள்துறைக்கு தமிழகத்தைச் சேர்ந்த ப.சிதம்பரம் அமைச்சராக இருப்பதால் மாநிலத்துக்கு கூடுதல் நிவாரண நிதி கிடைக்க வாய்ப்பு இருப்பதாக தமிழக அரசு எதிர்பார்க்கிறது.

**பால் கொள்முதல் விலை உயர்வு: முதல்வர் கருணாநிதி**

First Published : 06 Jan 2011 01:06:19 AM IST



சென்னை, ஜன. 5: தமிழகத்தில் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், ஆவின் பால் விலை உயராது என தமிழக அரசு அறிவித்துள்ளது.

பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்தப் பிரச்னை தொடர்பாக தலைமைச் செயலகத்தில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பேச்சுவார்த்தை செவ்வாய்க்கிழமை நடந்தது. அதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இதனிடையே, பால் கொள்முதல் விலை உயர்வு குறித்து முதல்வர் கருணாநிதி புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவின் விவரம்:

பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி ரூ.10.50 என இருந்த ஒரு லிட்டர் பசும் பாலின் கொள்முதல் விலை 2007 மார்ச் 7-ம் தேதி உயர்த்தப்பட்டது. லிட்டருக்கு ரூ.1.50 என்ற அளவில் உயர்த்தி ரூ.12-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அதன்பின், கொள்முதல் விலை 2008 மார்ச் 10-ல் மீண்டும் உயர்த்தப்பட்டது.

2009-ல் மேலும் ரூ.2 உயர்த்தப்பட்டது. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ.5.50 என்றும், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ.10.50 என்றும் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

பால் விலை உயராது: கொள்முதல் விலையை உயர்த்தி அளிக்க வேண்டும் என்ற பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கை ஏற்கப்படுகிறது. அதன்படி, பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ.1.10-ம், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ.2.20-ம் உயர்த்தி அளிக்க முதல்வர் கருணாநிதி புதன்கிழமை உத்தரவிட்டார்.

கொள்முதல் விலையை உயர்த்தி வழங்குவதால், நுகர்வோர் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, இப்போது ஆவின் மூலமாக விநியோகம் செய்யப்படும் பால் விற்பனை விலையை உயர்த்துவதில்லை என அரசு முடிவு செய்துள்ளதாக முதல்வர் கருணாநிதி வெளியிட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது எவ்வளவு? பசும் பால் லிட்டருக்கு கொள்முதல் விலையாக ரூ.15.54-ம், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 23-ம் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதன் காரணமாக, பசும்பால் லிட்டருக்கு ரூ.16.64-ம், எருமைப் பால் லிட்டருக்கு ரூ.25.20-ம் அளிக்கப்படும்.

ஏற்க மறுப்பு: இந்த கொள்முதல் விலை உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது என பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள், பசும் பால் லிட்டருக்கு ரூ.5-ம், எருமைப் பால் லிட்டருக்கு ரூ.8-ம் உயர்த்தித் தர வேண்டும் என கோரிக்கை விடுத்து இருந்தனர்.

கொள்முதல் விலை அவர்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப இல்லாத காரணத்தால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கூடிப் பேச பால் உற்பத்தியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தினமலர்

**சூடுபிடித்தது விவசாயம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,00:49 IST

பேரம்பாக்கம் : திருவள்ளூர் மாவட்டத்தில் பேரம்பாக்கம், மப்பேடு, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, வெள்ளவேடு உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் விவசாயம் சூடுபிடித்துள்ளது.கடந்த இரண்டு மாதங்களாக, பருவ மழை பெய்ததால் மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது. விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து, முடங்கி கிடந்த பயிர்த் தொழிலை தொடங்கினர். கடந்த மாதம் நிலத்தை

உழுது நெல் விதை விதைத்தனர்.தற்போது, நிலங்களை உழுது நாற்று நடவும், வேர்க்கடலை விதைக்கவும் ஆரம்பித்துள்ளனர். ஆனால், போதுமான கூலியாட்கள் இல்லாததால் குறித்த நேரத்தில் பயிர் வேலைகள் செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.இதனால், விவசாயிகள் நாற்று நட கூலியாக ஒருவருக்கு 200 ரூபாயும், ஏர் உழ ஒருவருக்கு 300 ரூபாயும் என, கடந்த ஆண்டை விட அதிகமாக பணம் கொடுத்து, ஒரு வாரம் முன்னதாக ஆட்களை அமர்த்தி வருகின்றனர். சிலர் கிராமங்களில் இருந்து, கூலியாட்களை டிராக்டர் மூலம் கொண்டு வந்து விவசாய வேலைகளை செய்கின்றனர்.

**கடலூரில் 97 மி.மீ., மழை: மீண்டும் வெள்ளக்காடானது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,00:24 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் நேற்று பெய்த, "அசுர வேக' மழையால், நகரமே வெள்ளக்காடானது. கடலூரில், அதிகபட்சமாக 97 மி.மீ., மழை கொட்டியது. கடலூர் மாவட்டத்தில், அடுத்தடுத்து வந்த புயல் சின்னம் காரணமாக, கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளத்தால் பாதித்தவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கி வருகிறது. மாவட்டத்தில், பல தாழ்வான பகுதிகளில் இன்னும் மழை நீர் வடியாத நிலை உள்ளது. இதற்கிடையே நேற்று, எதிர்பாராத வகையில், திடீரென மழை கொட்டியது. நேற்று பகல் 12 மணிக்கு மேல் பேய் மழை கொட்டியது. பிற்பகல் 3.15 மணிக்குள் 90 மி.மீ., மழை கொட்டி தீர்த்தது. இதனால், கடலூர் நகரமே வெள்ளக்காடானது. நகரில் பல இடங்களில் மூன்று அடி அளவுக்கு, தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்த மழையளவு மி.மீ., விவரம்: கடலூர் 96.60, சிதம்பரம் 46, லால்பேட்டை 46, காட்டுமன்னார்கோவில் 38, கொத்தவாச் சேரி 35, பரங்கிப்பேட்டை 35, அண்ணாமலை நகர் 25, சேத்தியாத்தோப்பு 23, புவனகிரி 19, வானமாதேவி 15, மேமாத்தூர் 10, பண்ருட்டி 9, விருத்தாசலம் 8.20, குப்பநத்தம் 8, வேப்பூர் 7, காட்டுமயிலூர் 5, பெலாந்துரை 5, ஸ்ரீமுஷ்ணம் 5, தொழுதூர் 5, லக்கூர் 3.20, கீழ்ச்செருவாய் 2 மி.மீ., மழை பதிவானது.

**மானிய விலையில் வாழைக்கன்று**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,01:50 IST

சென்னிமலை: எக்கட்டாம்பாளையம் விவசாயிகளுக்கு, 62 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பில் இடுபொருட்கள் மற்றும் திசு வளர்ப்பு வாழைக்கன்று மானியவிலையில் தோட்டக்கலைத் துறை சார்பில் வழங்கப்பட்டது. காங்கேயம் எம்.எல்.ஏ., விடியல் சேகர் நல உதவிகள் வழங்கினார். தோட்டக்கலைத் துறை மாவட்ட துணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட், உதவி இயக்குனர்கள்

ராமசுப்பிரமணியம், சண்முகம், பஞ்சாயத்து துணைத் தலைவர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தே.பருப்பு உற்பத்தி விவசாயிகள் மும்முரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,01:38 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் பருப்புக்கு தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால் உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய்க்கு அதிகத் தேவை ஏற்பட்டதால், சென்றாண்டு ஜனவரி மாதம் முதல் தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை கிடைத்தது. விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்தனர். செப்டம்பர் மாதம் முதல் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை வெளுத்துக் கட்டியதால், தேங்காய் பருப்பை உடைத்து காய வைக்க முடியாமல் விவசாயிகள் தவித்தனர். உற்பத்தி குறைந்ததால் விலை மேலும் அதிகரித்தது. ஐயப்பன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களால், நேரடியாக தேங்காய்க்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது.

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக 55 ரூபாய் வரை விற்றது. 29ம் தேதி ஒரே வாரத்தில் கிலோவுக்கு எட்டு ரூபாய் அதிகரித்தது. ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக 63.06 ரூபாய்க்கு விற்றது. நேற்று ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகப்பட்சமாக 64.06 ரூபாய், குறைந்தபட்சமாக 59.05 ரூபாய், சராசரியாக 62.46 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஒரு ரூபாய் அதிகரித்தது. நடப்பு வாரம் நான்கு லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.தேங்காய் பருப்புக்கு இரண்டு வாரங்களாக கூடுதல் விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தேங்காய் பருப்பு உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**ரூ.92.80 கோடி மதிப்பில் பயிர்க்கடன் வழங்கல்கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி.மணி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 06,2011,01:56 IST

கும்பகோணம்: "தஞ்சை, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்தாண்டு ரூபாய் 92.80 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது' என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி.மணி தெரிவித்தார்.கும்பகோணத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:தஞ்சாவூர் மாவட்டத்தில் 2010 -11ம் ஆண்டு பயிர்க்கடன் வழங்க தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூபாய் 50 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில், கடந்தாண்டு டிசம்பர் 31ம் தேதி முடிய 51.33 கோடி ரூபாய்

பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூபாய் 45 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் கடந்தாண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 41.47 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆக கூடுதல் ரூபாய் 95 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் ரூபாய் 92.80 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. 2009ம் ஆண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 74.15 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 2010 ண11ம் ஆண்டு பயிர்க்கடன் வழங்க தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூபாய் 40 கோடி குறியீடு ர்ணயிக்கப் பட்டது. இதில், கடந்தாண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 34.34 கோடி பயிர் கடன் வழங்கப் பட்டுள்ளது. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூபாய் 45 கோடி குறியீடு ர்ணயிக்கப்பட்டதில் ரூபாய் 49.84 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. 2009ம் ஆண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 63.88 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு 2010–11ம் ஆண்டு பயிர்க்கடன் வழங்க ரூபாய் 70 கோடி குறியீடு ர்ணயிக்கப்பட்டதில் ரூபாய் 62.38 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 58.33 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.தஞ்சாவூர் மாவட்டத்தில் 2010 ண11ம் ஆண்டில் டிசம்பர் 31 முடிய விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூபாய் 8.72 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூபாய் 8.26 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாய கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூபாய் 6.22 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் செயல்பகுதியில் உள்ள 233 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாகவும், வங்கியின் கிளைகள் வாயிலாகவும் தனிநபர்களுக்கு நகைக்கடன் வழங்கியதில் 2009ம் ஆண்டு டிசம்பர் 31முடிய ரூபாய் 214.69 கோடியாக லுவை இருந்தது.

தற்போது 2010ம் ஆண்டு டிசம்பர் 31 முடிய ரூபாய் 315.85 கோடியாக உள்ளது.கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் செயல்பகுதியில் உள்ள 268 தொடக்க வேளாண்ம கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாகவும், வங்கியின் கிளைகள் வாயிலாகவும்தனிநபர்களுக்கு நகைக்கடன் வழங்கிய 2009ம் ஆண்டு டிச., 31 முடிய ரூபாய் 351.65 கோடியாக லுவை இருந்தது. தற்போது 2010 டிச.,31 முடிய ரூபாய் 581.36 கோடியாக உள்ளது.தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியால் 2009ண10ம் ஆண்டு பொதுமக்கள் மற்றும் கூட்டுறவு றுவனங்களில் இருந்து வைப்புத்தொகை திரட்டியதில் 2009 டிச.,31 முடிய ரூபாய் 257.88 கோடியாக லுவை உள்ளது. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியால் 2009–10ம் ஆண்டு பொதுமக்கள் மற்றும் கூட்டுறவு றுவனங்களில் இருந்து வைப்புத்தொகைதிரட்டியதில் 2009 டி.,31 முடிய ரூபாய் 381.23 கோடியாகவும், 2010 டிச.,31 முடிய ரூபாய் 436.69 கோடியாகவும் லுவை உள்ளது.தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு

வங்கியால் விவசாயம் சார்ந்த மத்திய காலக்கடனாக ரூபாய் 2.86 கோடி 2010 டிச.,31 முடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**வாழை பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,23:30 IST

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில், கடந்தாண்டை விட, இந்தாண்டில் வாழை சாகுபடி அதிகரித் துள்ளது.கடந்த நவம்பர் மாதத்தில் தொடர்ந்து மழை பெய்ததால் குளம், குட்டைகளில் நீர் நிரம்பியது; பி.ஏ.பி., வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளதால் தண்ணீர் பற்றாக்குறை இல்லை. இதனால், அப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. வாழைக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க வங்கிகள் கடனுதவி வழங்குவதால், சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; இதனால், தண்ணீர் பாய்ச்சுவதற்கு தனியாக ஆட்களை நியமிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.கடந்தாண்டு தண்ணீர் பற்றாக்குறை நிலவியதால், நூறு ஏக்கரில் மட்டுமே வாழை சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

அவைகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது; மார்க்கெட்டில் வாழைக்கு நல்ல விலை கிடைப்பதால், வாழை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மார்கழி மாதம் வாழை பயிரிட சிறந்த பட்டமாகும். இந்த மாதத்தில் பயிரிடப்படும் வாழை, அதிக காற்று வீசும் ஆடி மாதத்தில், வளர்ச்சி பருவத்தில் இருப்பதால் காற்றினால் சேதமடையாது. இதனால், விவசாயிகள் வாழை பயிரிட மார்கழி மாதத்தை தேர்ந்தெடுக்கின்றனர். தற்போது பொங்கலூர் பகுதியில் வாழை சாகுபடி செய்யும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இன்னும் சில விவசாயிகள் வாழை சாகுபடி செய்வதற்கான ஆயத்தப் பணிகளில் உள்ளனர். கடந்தாண்டை விட இந்தாண்டு வாழை சாகுபடி மூன்று மடங்காக அதிகரித்து உள்ளது.

**வேளாண் திட்ட பணிகள் இணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,23:32 IST

விழுப்புரம் : காணை வட்டாரத்தில் வேளாண் திட்ட பணிகளை இணை இயக்குனர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். காணை வட்டாரத்தில் மேற்கொண்டுள்ள திட்ட பணிகளை வேளாண் இணை இயக்குனர் ராமகிருஷ்ணன், வேளாண் உதவி இயக்குனர் தாமோதரன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். குப்பம் கிராமத்தில் ஸ்ரீதரன் என்பவரின் வயலில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ்

அமைக்கப்பட்ட ராஜராஜன் 1000 நெல் செயல்விளக்க தளையினை அதிகாரிகள் பார்வையிட்டனர். காணை வட்டாரம் வைலாமூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு ராஜராஜன் 1000 நெல் சாகுடி பெருவிளக்க தளையையும் பார்வையிட்டனர். அதே கிராமத்தை சேர்ந்த தேவராஜ், பிரகாஷ் ஆகியோரது வயலில் சாகுபடி பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. காணை வேளாண் அலுவலர் சவுந்தர்ராஜன், உதவி வேளாண் அலுவ லர்கள் ரகோத்தமன், பழனி உடனிருந்தனர்.

**வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,23:44 IST

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பாசனப்பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம் நடந்தது.பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் லோகநாதன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். செயற்பொறியாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார். உதவி செயற்பொறியாளர் சுகுமார் வரவேற்றார்.செயற்பொறியாளர் பழனிசாமி, பழனிகுமார், பேராசிரியர் வைத்தியநாதன், உதவி பேராசிரியர் கண்ணன், பொறியாளர் பொன்னம்பலம் ஆகியோர் மழை நீர் சேகரிப்பு, நீர்வள ஆதாரங்கள் பராமரிப்பு, சாகுபடி தொழில் நுட்பம், அறுவடைக்கு பின் செய் நேர்த்திகள், வேளாண் இயந்திரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிப்பேசினர்.உதவி பேராசிரியர்கள் அருள்செந்தில், தனுஷ்கோடி, உதவி பொறியாளர் நாகநாதன் மற்றும் உழவர் மன்றம், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**திடீர் பரபரப்புநெற்பயிரில் நோய் 700 ஏக்கர் சேதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,20:49 IST

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் வேளாண்மை வட்டார பகுதிகளில் 56 கிராமங்களில் எட்டாயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ள நெற்பயிரில் 700 ஏக்கரில் இலை சுருட்டுப்புழு, குலை நோய் தாக்கியதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். குலை நோய்: இலையின் மேற்பகுதியில் பழுப்புநிற கண் வடிவ புள்ளிகள் தோன்றி, காய்ந்து, பயிர்களையும் பாதிக்கும். நோய் அறிகுறிகள் தென்பட்டால், எக்கருக்கு, 500 கிராம் சூடோமோனஸ் பிளோரசன்ஸ் மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்கள் இடைவெயில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். இலை சுருட்டு புழு: நெல் பயிரை தாக்காமல், இலைகளை மட்டுமே தாக்கும் புழுக்கள், விளாச்சேரி, தென்பழஞ்சி, கருவேலம்பட்டி கிராமங்களில் 500 ஏக்கர் பயிரை தாக்கி உள்ளது.

ஏக்கருக்கு 400 மி.லி., மானோ குரோடோபஸ் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். கர்நாடகா பொன்னி பயிரிட்டுள்ளவர்கள், நோய் தாக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை

நடவடிக்கையாக, ஏக்கருக்கு சூடோமோனஸ் 500 கிராமை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து உடனடியாகவும், 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் தெளிக்கலாம். விபரங்களுக்கு, 94439 30379, 99948 74372 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என, திருப்பரங்குன்றம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வன், வேளாண் அலுவலர் உலகம்மாள் தெரிவித்தனர்.

**பயிர் நிவாரணத்திற்கு ஒதுக்கீடு ரூ.19.20 கோடி : முழு கணக்கெடுப்புக்கு பின் வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,22:34 IST

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் மழை பாதித்த பயிர்களுக்கு, 19.20 கோடி இழப்பீடு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. முழு கணக்கெடுப்புக்கு பின் தொகையை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மாவட்டத்தில் 89 ஆயிரம் எக்டேரில் நெல் நடவு செய்திருந்தனர். மிளகாய், வாழை, நிலக்கடலை, பயறு வகைகள் என மொத்தம் ஒரு லட்சம் எக்டேரில் விவசாயம் செய்யப்பட்டது. சமீபத்திய மழையால் நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. தொடர் மழையால், விளையும் தருவாயில் இருந்த நெற்பயிர்கள் முளைத்தன; குலை நோய், பூச்சி தாக்குதலாலும் பயிர்கள் சேதமாகின; இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள், கலெக்டரிடம் மனு கொடுத்தனர். கணக்கெடுப்பு: இதன்படி, பாதிக்கப்பட்ட பயிர் விபரங்களை கணக்கெடுக்க உத்தரவிடப்பட்டது. விவசாயம், தோட்டக்கலை, வருவாய் துறையினர் இணைந்து சேத விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

பாதிப்பு: இதில், நெற்பயிர் 17 ஆயிரத்து 698 எக்டேர், கடலை- 357, பயறு- 93, மிளகாய்- 542, மிளகாய்- 1,950, தோட்டக்கலை பயிர்கள் 5,000 எக்டேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, தோராயமாக தெரியவந்துள்ளது. முழு மதிப்பீடு எடுக்கப்படுகிறது. மழையை தொடர்ந்து பூச்சி தாக்குதல் குறித்தும் விபரம் சேகரிக்கப்படுகிறது. இழப்பீடு: பயிர்களுக்கு இழப்பீடு வழங்க, 19 கோடி 22 லட்சத்து 19 ஆயிரத்து 555 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சேத விபரங்கள் முழுமையாக சேகரிக்கப்பட்டு அறிக்கை கிடைத்தவுடன், இழப்பீடு வழங்கப்படும்.

விவசாய அலுவலர் ஒருவர் கூறுகையில்,"" தேவகோட்டை, கண்ணங்குடி, சாக்கோட்டை, கல்லல், இளையான்குடி உள்ளிட்ட சில பகுதிகளில் டீலக்ஸ் பொன்னி பயிரிடப்பட்டுள்ளது. நல்ல விளைச்சல், கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் விரும்பி பயிரிட்டனர். பால் பிடிக்கும் பருவத்தில் தொடர் மழை, பணியால் நெல் பதரானது. சேத விபரம் முழுமையாக கிடைத்ததும், நெல்லுக்கு 10 ஆயிரம், மிளகாய், இறவை பயிருக்கு 7, 000, மானாவாரிக்கு 4,000 ரூபாய் வரை, இழப்பீடு கிடைக்கும்," என்றார்.

**கரும்பு விவசாயிகள்ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,02:14 IST

சிவகங்கை: கரும்பு விவசாயிகள், சக்தி சர்க்கரை ஆலை அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் சிவகங்கையில் நடந்தது.ஆர்.டி.ஓ., பொன்னையா தலைமை வகித்தார். குணசேகரன் எம்.எல்.ஏ., சக்தி சர்க்கரை ஆலை துணை தலைவர் ஆறுமுகம், தாசில்தார் வளர்மதி, டி.எஸ்.பி., கண்ணன், கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க மாநில தலைவர் ராமநாதன், மாவட்ட செயலாளர் ரகுநாதன், துணை செயலாளர் மகேந்திரன் பங்கேற்றனர். "ஈரோடு மாவட்டம் ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு டன்னுக்கு 1,987 ரூபாய் வழங்கப்படுகிறது.

அதே போல சக்தி சர்க்கரை ஆலையிலும் வழங்கவேண்டும். விவசாயிகள் வழங்கும் கரும்புக்கு, டன்னுக்கு அரை கிலோ சர்க்கரையை, ரேஷன் கடை விலைக்கே வழங்கி வந்தனர். ஆனால், கடந்த ஆண்டு கூடுதல் விலைக்கு வழங்கினர். பழைய விலைக்கே சர்க்கரை வழங்கவேண்டும்,' என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.இது குறித்து ஆலை நிர்வாக இயக்குனரிடம் ஆலோசித்து, ஜன.,13 க்கு பின் முடிவு அறிவிப்பதாக, உறுதி அளிக்கப்பட்டது.

**நெல் கொள்முதல் மையம்... துவக்கப்படுமா விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2011,22:38 IST

ராஜபாளையம் : கடந்த ஆண்டு அறுவடை காலம் முடியும்போது நெல் கொள்முதல் மையம் துவக்கியதால், தனியாருக்கு நெல் விற்று, விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்தனர். இதனை தவிர்க்க ராஜபாளையம், சேத்தூரில் உடனடியாக கொள்முதல் மையம் துவக்க வேண்டும். ராஜபாளையம் தாலுகாவில் புதுக்குளம், மருங்கூர், ஆதியூர், கருங்குளம் என நூற்றுக்கும் மேற்பட்ட கண்மாய்கள் உள்ளன. கண்மாய்கள் மூலம் 10 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் நடந்து வருகிறது. அக்டோபரில் நடவுப் பணி துவங்கி, ஜனவரி, பிப்ரவரியில் அறுவடை நடக்கும். பெரும்பாலும் ஆந்திரா பொன்னி, கர்நாடகா பொன்னி பயிரிடப்பட்டு உள்ளது. நடவு, களை எடுத்தல், மருந்து அடித்தல் போன்றவற்றால் விவசாயிகள் பராமரிப்பு செலவு அதிகரித்துள்ளது.

அறுவடை, கதிர் அடித்தல், வண்டி கூலி என செலவுகளும் உள்ளன. கடந்த ஆண்டு அறுவடை காலம் முடியும்போது, ராஜபாளையத்தில் அரசு நெல் கொள்முதல் மையம் துவங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தனியாருக்கு நெல் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது 70 கிலோ நெல் மூடையை, குறைந்த விலைக்கு விற்றனர். நெல்லின் தரத்தை காரணமாக காட்டி, மூடைக்கு 2 முதல் 5 கிலோ நெல் "எக்ஸ்ட்ரா' பெற்ற சம்பவங்களும் நடந்தன. இவற்றை தவிர்க்க நெல் கொள்முதல் மையம் ராஜபாளையம் மற்றும் சேத்தூரில்

உடனடியாக துவங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழக விவசாயிகள் சங்க ராஜபாளையம் நகர் செயலாளர் முருகேசன் கூறுகையில், ""நெல் கொள்முதல் மையம் மூலம் கடந்த ஆண்டு குவிண்டாலுக்கு ஆயிரத்து 100 ரூபாய் அரசு வழங்கியது. தற்போது எல்லா பொருட்களின் விலை உயர்வால், செலவு அதிகரித்து உள்ளது. விவசாயிகளின் நலன் கருதி குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய் வழங்கவேண்டும். விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்ற நெல் கொள்முதல் மையம் உடனடியாக துவக்கவேண்டும்" என்றார்.

## *பால் கொள்முதல் விலை உயர்வு கருணாநிதி உத்தரவு*

*சென்னை, ஜன.6–*

*பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க முதல்–அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.*

*இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–*

*கொள்முதல் விலை உயர்வு*

*கடந்த 2006–ம் ஆண்டு முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின், பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி 7.3.2007 அன்று 10 ரூபாய் 50 காசு என்றிருந்த பசும்பால் கொள்முதல் விலையை ஒரு ரூபாய் 50 பைசா உயர்த்தி ரூ.12 என கொள்முதல் செய்யப்பட்டது. அதன்பிறகு, 10.3.2008–ல் அதை மேலும் ரூ.2 உயர்த்தியும், 1.9.2009 அன்று ரூ.2 உயர்த்தியும் ஆக மொத்தம், கடந்த 4 ஆண்டு காலத்தில் பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 காசு என கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்பட்டது. எருமைப்பாலுக்கு 7.3.2007–ல் ஒரு ரூபாய் 50 காசும், 10.3.2008–ல் ரூ.4–ம், 1.9.2009–ல் ரூ.5 உயர்த்தியும் கூடுதலாக எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் 50 காசு என கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது.*

*கருணாநிதி உத்தரவு*

*தற்போது, பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, பால் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் பசும்பாலுக்கு லிட்டர்*

ஒன்றுக்கு ஒரு ரூபாய் 10 காசும், எருமைப்பாலுக்கு 2 ரூபாய் 20 காசும் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க முதல்–அமைச்சர் கருணாநிதி ஆணையிட்டுள்ளார்.
இந்த கொள்முதல் விலை உயர்வு மூலம் நுகர்வோர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தற்போது ஆவின் மூலமாக வினியோகம் செய்யப்பட்டும் பால் விற்பனை விலையை உயர்த்துவதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.
இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## நடப்பு நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு மானியச் செலவினம் ரூ.25,000 கோடி அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு மானியச் செலவினம் ரூ.25,000 கோடி அதிகரித்து ரூ.80,000 கோடியாக உயரும் என உணவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது, பட்ஜெட் மதிப்பீட்டைக் காட்டிலும் 44 சதவீதம் (ரூ.55,578 கோடி) அதிகமாகும்.
உணவு பணவீக்கம்
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், டிசம்பர் 18–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 14.44 சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
இதன் அடிப்படையில், உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி உள்ளது. ஒரு சில உணவு தானியங்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இதனால், உணவு தானியங்களை அதிக அளவில் கையிருப்பு வைக்க வேண்டிய நிலை

ஏற்பட்டுள்ளது. விதிமுறைகளின்படி, கையிருப்பு வைக்க வேண்டிய அளவைக் காட்டிலும் மூன்று மடங்கிற்கு மேல் கையிருப்பு அதிகரித்துள்ளது. இதனால், இருப்பு வைப்பதற்கான செலவும் மிகவும் உயர்ந்துள்ளது.

உணவு தானியங்கள் விலை அதிகரித்து வருவதால், மத்திய அரசு, பொது விநியோகத்திற்கு மானிய விலையில் கூடுதலாக உணவு தானியங்களை வழங்கி வருகிறது. இதுபோன்ற காரணங்களால், உணவு மானியச் செலவினம் உயர்ந்துள்ளது.

நிதி பற்றாக்குறை

கடந்த 2002–03–ஆம் நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போது, மத்திய அரசின் உணவு மானியச் செலவினம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உணவு மானியச் சுமை அதிகரித்து வருவதையடுத்து, மத்திய அரசின் நிதி பற்றாக்குறை உயரலாம் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது. அதேசமயம், வருவாய் அதிகரித்து உள்ளதால் இதனை கட்டுப்படுத்த முடியும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நடப்பு நிதி ஆண்டில், நிதி பற்றாக்குறை ரூ.3.81 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5 சதவீதமாகும்.

## சென்ற 2010–ஆம் ஆண்டில் ரப்பர் விவசாயிகள் வருவாய் 75% உயர்வு



எஸ் சனந்தகுமார்

கொச்சி

சென்ற 2010–ஆம் ஆண்டில், ரப்பர் தோட்ட விவசாயிகளின் வருவாய், கடந்த 2009–ஆம் ஆண்டைக் காட்டிலும் 75 சதவீதம் அதிகரித்து ரூ.14,778 கோடியாக உயர்ந்துள்ளது.

இதற்கு, அவ்வாண்டில் இயற்கை ரப்பர் விலை மிகவும் உயர்ந்ததே முக்கிய காரணமாகும். கடந்த 2009–ஆம் ஆண்டு டிசம்பர் 30–ந் தேதி அன்று ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.139–ஆக இருந்தது. இது, சென்ற ஆண்டு டிசம்பர் 31–ந் தேதி அன்று

*48.5 சதவீதம் அதிகரித்து ரூ.206.50–ஆக உயர்ந்தது.*

*ரப்பர் விலை*

*கடந்த 10 ஆண்டுகளில், இயற்கை ரப்பர் விலை, தங்கத்தையும் விஞ்சிடும் வகையில் 8 மடங்கு அதிகரித்துள்ளது என்று கொச்சி ரப்பர் வியாபாரிகள் சங்கத் தலைவர் என்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.*

*கனமழையால், இந்தியாவில் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும் இயற்கை ரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. புதிதாக ரப்பர் பயிரிட்டு அது பலன் தர வேண்டுமானால் ஏழு ஆண்டுகள் ஆகும். எனவே, ரப்பருக்கு பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சப்பாட்டால் விலை உயர்ந்துள்ளது.*

*இந்நிலையில், நம் நாட்டில் கார்கள், இரு சக்கர வாகனங்கள், வர்த்தக வாகனங்கள் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனை வரலாறு காணாத அளவில் அதிகரித்து வருகிறது. இதனால், டயர் தயாரிப்பு நிறுவனங்கள் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனால், ரப்பருக்கான தேவைப்பாடு மிகவும் அதிகரித்துள்ளது. இதனாலும் விலை உயர்ந்து வருகிறது.*

*கேரளா*

*நாட்டின் ரப்பர் உற்பத்தியில் கேரளாவின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது. எனவே, ரப்பர் விலை உயர்வால், கேரள விவசாயிகள்தான் அதிக பலன் அடைந்துள்ளனர். தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு 2.97 சதவீதம் மற்றும் 2.57 சதவீதமாக உள்ளது.*

*ரப்பர் விலை உயர்வால், சிறிய விவசாயிகள் நல்ல அளவில் பலன் பெற்றுள்ளனர். ரப்பர் உற்பத்தியில் இவர்களின் பங்களிப்பு 94 சதவீதமாக உள்ளது. ரப்பரை பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலைக்கும், சந்தை விலைக்கும் இடையில் அதிக வித்தியாசம் இருப்பதில்லை. இதுவும் விவசாயிகளுக்கு சாதகமான அம்சமாகும்.*

*அதிக வருவாய் கிடைத்துள்ளதால், கேரளாவில் உள்ள ரப்பர் விவசாயிகள், ரியல் எஸ்டேட் மற்றும் நிறுவனப் பங்குகளில் அதிக அளவில் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

## தயாரிப்பு பொருள்கள் விலை உயர்வால் பணவீக்கம் உயரும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*பால், வெங்காயம், பூண்டு மற்றும் காய்கறிகள் விலை உயர்ந்து வருகிறது. இந்நிலையில், டயர்கள், கார்கள் மற்றும் குளிர் சாதன பெட்டிகள், வாஷிங் மெஷின்கள் உள்ளிட்ட நுகர்வோர் சாதனங்கள் விலையையும் நிறுவனங்கள் உயர்த்தி உள்ளன. இதுபோன்ற காரணங்களால், டிசம்பர் மாதத்திற்கான பொது பணவீக்க விகிதம் உயரும் நிலை உள்ளது.*

*மூலப்பொருள்கள்*

*உருக்கு மற்றும் இதர மூலப்பொருள்கள் விலை உயர்வால் எல்.ஜி. மற்றும் வேர்ல்பூல் ஆகிய நிறுவனங்கள் நுகர்வோர் சாதனங்கள் விலையை 4 சதவீதம் வரை உயர்த்தி உள்ளன.*

*டாட்டா மோட்டார்ஸ் நிறுவனம், கார்கள் விலையை ரூ.30,000 வரை உயர்த்தி உள்ளது. மகிந்திரா – மகிந்திரா, ஹூண்டாய் மற்றும் ஜெனரல் மோட்டார்ஸ் ஆகிய நிறுவனங்களும் கார்கள் விலையை உயர்த்தப் போவதாக அறிவித்துள்ளன. இயற்கை ரப்பர் விலை உயர்வால் சில டயர் நிறுவனங்களும் டயர்கள் விலையை உயத்தி உள்ளன.*

*வெங்காயம்*

*வெங்காயம் விலை சற்று குறைந்துள்ள நிலையிலும், பல நகரங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.45–60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அமுல் மற்றும் மதர் டெய்ரி ஆகிய பிராண்டு பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.2 வரை உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், சமையல் எண்ணெய் விலையும் உயர்ந்து வருகிறது.*

## பூண்டு விலை குறைந்தது கோவையில், துவரம்பருப்பு விலை உயர்வு மூடைக்கு ரூ.150 அதிகரிப்பு

*கோவை, ஜன.6–*

*வரத்து குறைவு காரணமாக கோவையில் உள்ள மார்க்கெட்டுகளில் விற்பனை ஆகும் துவரம்பருப்பின் விலை உயர்ந்து வருகிறது. மூடைக்கு ரூ.150 அதிகரித்து உள்ளது. அதே நேரத்தில் சீன பூண்டின் விலை குறந்துள்ளது.*

மளிகை பொருட்கள்

கோவை மாவட்டத்தில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு அனைத்து வகையான மளிகை பொருட்களும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் உள்ளூர் பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

குறிப்பாக துவரம் பருப்பு மராட்டியம், மத்தியபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும், வர மிளகாய் ஆந்திர மாநிலத்தில் இருந்தும் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமிழகத்தில் பெய்த மழை காரணமாக மளிகை பொருட்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

துவரம்பருப்பு–வரமிளகாய்

குறிப்பாக கடந்த சில நாட்களாக 100 கிலோ கொண்ட ஒரு மூடை துவரம் பருப்பு ரூ5 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. ஆனால் நேற்றைய நிலையில் மூடைக்கு ரூ.150 உயர்ந்து ரூ.5,150 ஆக விற்பனை ஆகிறது. அதாவது சில்லறை விலையில் ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.52–க்கு விற்பனை ஆகிறது.இதே போல் ரூ.1,600–க்கு விற்பனை ஆன 80 கிலோ மூடை வரமிளகாய் ரூ.100 உயர்ந்து ரூ.1,700–க்கு விற்பனை ஆகிறது. சில்லறை விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.10 உயர்ந்துள்ளது.

பூண்டு விலை சரிவு

மார்க்கெட்டில் தற்போது சீனா பூண்டின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக ரூ.220–க்கு விற்பனை ஆன ஒரு கிலோ சீனா பூண்டு ரூ.40 குறைந்து ரூ.180–க்கு விற்பனை ஆகிறது.

தற்போது கையிருப்பில் உள்ள துவரம் பருப்பு மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வருகிற தை மாதம் முதல் புதிய பருப்புகள் சந்தைக்கு வரத் தொடங்கும் அப்போது அதன் விலைகள் குறைய வாய்ப்பு உள்ளது. மேலும் தமிழகம் மற்றும் ஆந்திராவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக மிளகாய் செடிகள் அழுகி சேதம் அடைந்து விட்டன. இதன் காரணமாக அதன் உற்பத்தி குறைந்து விலை அதிகரித்துள்ளது என்று மளிகை மார்க்கெட் சங்க நிர்வாகி கணேசன் தெரிவித்தார்.